27th July 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : பழக்கப் பிரகாரம் (customary)ஏதாவது செய்திருந்தால் இப்பொழுது இருக்கும் நிலைமையிலே நாம் பிரவேசித்து இந்த இனும்களிலே ஒன்றும் செய்யமுடியாது. ஆகையினாலே இந்த இனுமகளை எடுத்துவிட்டால் அப்பொழுது இந்த சிக்கல்களெல்லாம் போய்விடும்.

SRI R. KRISHNASWAMI NAIDU : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி சர்க்கார் கொண்டுவரப்போகும் மசோதாவில் தேவஸ்தான இனும்களும் அடங்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இனும் எல்லாம் இனும் தான். தேவஸ்தான இனும் அந்தக் கோவில்களின் வருமானம் பாதிக்கப் படாத வகையிலே 'எஸ்டேட்' எந்த முறையிலே செய்யப்பட்டதோ, அந்த முறையிலே இதுவும் கவனிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : Do the Government realize that the existing inam rights enjoyed by inamdars come in conflict with the rights and privileges of pattadars of ryotwari area living side by side in the same village?

THE HON. SRI M. A. MANICKAVELU : That is one of the reasons for which inams are sought to be abolished.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Can the Hon. the Minister for Revenue give us figures of 1936 inam villages districtwar in the State?

THE HON. SRI M. A. MANICKAVELU : How can the Leader of the Opposition expect me to give him figures districtwar unless he gives me previous notice?

* Q. 291–296—Vide pages 555–560 infra.

Basic tax and agricultural income-tax.

* 297 Q.—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the basic land tax system is in vogue in any part of the State;

(b) if so, where and the amount of tax levied per acre; and

(c) whether there is any proposal to revise the land revenue tax system by the introduction of basic tax and agricultural income-tax in all parts of the State?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) Basic land tax, at the rate of Rs. 1–9–0 per acre, is levied in the Kanyakumari district and in the Shencottah taluk of the Tirunelveli district which have been transferred to this State from the former Travancore-Cochin State.

(c) The Government examined this question recently and decided that the present land revenue system need not be replaced by a basic tax and agricultural income-tax.

SRI T. S. RAMASWAMY PILLAI: May I know whether any proposal is under consideration of the Government with regard to alteration of the basic tax in Kanyakumari district and Shenkottai?

THE HON. SRI M. A. MANICKAVELU: I have just now said that it was considered and dropped. The trouble is that the basic tax in regard to dry lands is as low as two or four annas. We cannot take that as basic tax and levy agricultural income-tax.

Sugar Factory.

* 281 *Q.*—SRI M. SELVARAJ: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any licence has been issued for the starting of a sugar factory at Pennadam in the South Arcot district; and

(*b*) if so, the total productive capacity of the factory?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) No, Sir. Action is being taken on a proposal to organize a sugar factory with a daily cane-crushing capacity of about 800 tons in that area on co-operative basis. The establishment of a factory is dependent on various factors, including the grant of a licence for the factory by the Government of India.

SRI S. B. ADITYAN: சர்க்கரை ஆலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும்பொழுது அந்த தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருளை, அதாவது கரும்புச் சக்கையை 'நியூஸ் பிரிண்ட்', அதாவது பத்திரிகைக் காகிதம் என்ற காகிதமாக மாற்றவேண்டிய பொறுப்பு அந்த தொழிற்சாலைகளுடையது என்ற நிபந்தனை உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 'நியூஸ் பிரிண்ட்' ஆலை வைப்பது என்று சொன்னால் அது ஒரு பெரிய தொழிற்சாலை. சாதாரணமாக 800 டன் 'கிரஷ்' செய்யக்கூடிய சர்க்கரை ஆலையில் கிடைக்கக்கூடிய 'பகாஸை' வைத்துக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் 'நியூஸ் பிரிண்டு' கனம் அங்கத்தினர் நடத்துகின்ற பத்திரிகைக்கு ஒரு நாளைக்குக் கூட போதாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMY: தென் ஆற்காடு ஜில்லாவில் அதிகப்படியாக ஒரு சர்க்கரை ஆலையை பென்னாடத்தில் திறப்பதன் மூலம் விவசாயிகளுடைய பிரச்னை தீரும் என்று மந்திரி அவர்கள் பட்ஜெட் விவாதத்தின் போது சொன்னார்கள். அதைப் பற்றி நாங்கள் மகிழ்ச்சி அடைந்து அதை வரவேற்கிறோம். உடனடியாக இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி லைசென்ஸ் கிடைக்கின்ற அளவுக்கு உடனடி நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: சென்னை சர்க்கார் பென்னாடத்தில் கூட்டுறவு முறையில் ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டுமென்று மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்திருக்கிறார்கள். அதற்காக கூட்டுறவு முறையில் பணம் வசூல் செய்வதற்கு ஏற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த பட்ஜெட்டில் கூட கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்துவதற்கு உதவி செய்வதற்காக 15 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.